1979 ஏப்ரல் 28]

(முற்பகல் 10-10)

(7) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித் துறைகளும்) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. எஸ் இராகவானந்தம்: தலைவரவர்களே, தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித் துறைகளும்) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப் படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) பசுக்கள், வெட்டப்படுவதைத் தடுத்தல்—கால்நடைப் பாதுகாப்புச் சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: தலைவரவர்களே, தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு பசுக்கள் வெட்டப்படுவதைத் தடுத்தல்—கால்நடைப் பாதுகாப்புச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: தலைவரவர்களே, இச்சட்டமுன் வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ) ஊராட்சிகள் (பதவிக் கால நீட்டிப்பு) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, "தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (பதவிக் கால நீட்டிப்பு) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்" என்று மொழிகிறேன்.

---

* 1979, ஏப்ரல் 25-ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.